Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JANUARY 13, 2025

திங்கட்கிழமை, 13 ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர்: 135 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



உங்களுக்கு நீங்களே தீபங்களாக இருங்கள்,
உங்களுக்கு நீங்களே புகலிடமாயிருங்கள்,
வெளியில் எத்தகைய புகலிடத்தையும் நாடாதீர்கள்...
(தர்மபோதனை)



# கெலிஓயாவில் மாணவி கடத்தல்

பேராதெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெலிஓயா, அம்பரப்பொல பகுதியில் சனிக்கிழமை(11) அன்று நடந்து சென்று கொண்டிருந்த இரண்டு மாணவிகளில் ஒரு மாணவி கடத்தப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் வீடியோ பகிரப்பட்டுள்ளது.

அதில் ஒரு மாணவி தப்பிச் சென்றுள்ளார். எனினும், வாகனத்துக்குள் இழுத்துப் போடப்பட்ட மாணவியைக் காப்பாற்றும் முயற்சியில் இவ்வீதியில் சென்றவர் முயற்சித்துள்ளமை அந்த காட்சிகளில் பதிவாகியுள்ளது. அவ்விரு மாணவிகளும் வீதியோரத்தில் நடந்து சென்று கொண்டிருந்த போது, கறுப்பு நிற வாகனமொன்று அம்மாணவிகளை நோக்கிப் பயணித்துள்ளது.

அவ்விரு மாணவிகளும் வாகனத்துக்கு அருகில் வந்ததும் பக்க கதவைத் திறந்த ஒருவர், அதிலொரு மாணவியை இழுந்து வாகனத்துக்குள் தள்ளியுள்ளார். எனினும், மற்றைய மாணவி தாங்கள் வந்த பக்கத்துக்கே ஓடிவிட்டார்.

மாணவி கடத்தப்படுவதை அவ்வீதியால் பயணித்தவர் அவதானித்து, ஓடி சென்று வாகனத்தின் கதவை மூடவிடாது தடுத்து, தன்னுடைய பயணப் பையையும் அவ்விடத்திலேயே விட்டுவிட்டு, வாகனத்தில் தொத்திக்கொண்டுள்ளார். அவருடனேயே அவ்வாகனம் தலைமறைவாகிவிட்டமை வீடியோ காட்சிகளில் பதிவாகியுள்ளன.



## புளி 2,000 ரூபாய்

ரஞ்சித் ராஜபக்‌ஷ

உள்ளூர் சந்தையில் சமையலுக்கு பயன்படுத்தப்படும் புளியின் பற்றாக்குறை காரணமாக, ஒரு கிலோ கிராம் புளியை 2,000 ரூபாய் சில்லறை விலையில் விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக ஹட்டன் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## பன்முக ஆளுமை படைத்த அந்தனி ஜீவா காலமானார்



எழுத்தாளர், நாடக ஆசிரியர், நாடகக் கலைஞர், நாடக இயக்குநர், தொழிற்சங்க செயற்பாட்டாளர், இதழாளர், பதிப்பாளர், சிறுகதை ஆசிரியர், முற்போக்குச் சிந்தனையாளர் என பன்முக ஆளுமை படைத்தவர் அந்தனி ஜீவா சனிக்கிழமை (11) காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 81ஆகும்.

மலையகத்தில் நீண்ட காலமாக 'கொழுந்து' சஞ்சிகையை 31ஆவது இதழ் வரை 20இற்கும் மேற்பட்ட வருடங்கள் தனிமனிதனாக இருந்து வெளியிட்டு வருவது என்பது கற்பனை செய்ய முடியாத ஒன்றாகும். மலையக எழுத்துக்களைப் பதிப்பிக்கும் முயற்சிகளிலும் பங்களித்து வரும் அந்தனி ஜீவா, 1944 மே 26இல் பிறந்தார்.

கலையையும், இலக்கியத்தையும் வெறும் பொழுதுபோக்குக்காக இல்லாமல், சமூக விழிப்புணர்வுக்கான ஊடகமாகக் கருதித் தமது பணியை மேற்கொண்டு வந்தவர்.

கொழும்பைப் பிறப்பிடமாகவும் மலையகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட எழுத்தாளரும் கவிஞருமாக அந்தனி ஜீவா விளங்குகிறார். கொழும்பு சுவர்ண வீதியிலிருந்த தமிழ்ப் பாடசாலையிலும் பம்பலப்பிட்டி புனித மரியாள் கல்லூரியிலும் கல்வி கற்றவர் அந்தனி ஜீவா. இவர், தந்தை செபஸ்டியன், தாயார் லட்சுமி அம்மாள் ஆகியோரின் புதல்வராவார்.

1960இல் எழுதத் தொடக்கிய இவர் கண்டியூர் கண்ணன், மாத்தளை கௌதமன், கவிதா ஆகிய புனைபெயர்களிலும் எழுதியுள்ளார். தினகரன், சுதந்திரன், மாணவன், தமிழருவி, திருமகன், கலைமலர், மாணவமலர், மாலைமுரசு, ஈழநாடு,

தொடர்ச்சி P2

## மாணவி கடத்தல்; சாரதி கைது

வேனில் வந்து சிறுமி ஒருவர் கடத்தப்பட்டுள்ள சம்பவம் தவுலகல பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது. அது தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய, தவுலகல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு ஞாயிற்றுக்கிழமை (12) மாலை அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## தனிநபர் பாவனை வாகன இறக்குமதிக்கு இன்னும் அனுமதியில்லை

ச.சேகர்

நிதி அமைச்சினால் சனிக்கிழமை (11) இரவு வெளியிடப்பட்ட ஆயத் தீர்வை (Excise Duty) தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் (வர்த்தமானி அறிவித்தல் எண்.. GN 2418-43 dated 10/01/25), இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் என்ஜின் கொள்ளளவின் பிரகாரம் வரி அறவிடுவது தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன.

தொடர்ச்சி P2

## தமிழக மீனவர்கள் 8 பேர் கைது



தமிழக மீனவர்களின் இரண்டு விசைப் படகுகளைக் கைப்பற்றி 8 மீனவர்களை ஞாயிற்றுக்கிழமை (12) அதிகாலை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதாக இந்தியப் பத்திரிகையான தி இந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற முகேஷ்குமார், மரிய ரெட்ரிக்ஷன் ஆகியோருக்குச் சொந்தமான இரண்டு படகுகளில் களஞ்சியம், முனிஸ்வரன், கார்மேகம், கண்ணன், பிரியன், சவேரியார் அடிமை, மரிய ஜான் ரெமோரோ, பிரிஸ்மன் ஆகிய 8 மீனவர்கள் வடக்கு மன்னார் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

'உலக அயலகத் தமிழர் தினம் 2025'

## அமைச்சர் சந்திரசேகர், பிரதியமைச்சர் பிரதீப் பங்கேற்பு

எஸ்.சதீஸ்



'உலக அயலகத் தமிழர் தினம் 2025' தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரத்தின் நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் சனிக்கிழமை(11) ஆரம்பமானது, ஞாயிற்றுக்கிழமையும்(12) இடம்பெற்றது.

முதல் நாள் நிகழ்வுகள், தமிழ்நாட்டின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து

தொடர்ச்சி P2

## சிவனொளிபாதமலை படிக்கட்டுகளில் நீர் வரத்து

செ.தி.பெருமாள்



நுவரெலியா மாவட்டத்தில் சனிக்கிழமை(11) மாலை முதல் பெய்து வரும் தொடர் மழையால் பெருந்தோட்ட தொழிலாளர்கள், பண்ணை யாளர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## போதைப் பொருளுடன் இரு பெண்கள் உட்பட11 பேர் கைது

நாடளாவிய ரீதியில் ஒன்பது இடங்களில் சனிக்கிழமை (11) மேற்கொள்ளப்பட்ட அதிவிசேட சோதனை நடவடிக்கைகளின் போது, ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருள் ஆகியவற்றை தம்வசம் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு பெண்கள் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து மொத்தமாக 178 கிராம் 997 மில்லிகிராம் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அதில், 135 கிராம் 3320 மில்லிகிராம் (138 கிராம் 32 மில்லிகிராம்) ஐஸ் போதைப்பொருளும், 40 கிராம் 965 மில்லிகிராம் ஹெரோய்ன்



போதைப்பொருளும் அடங்கும் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ராஜகிரிய, தலங்கம, மோதரவில, பாணந்துறை, கல்கிஸை, அஹுங்கல்ல, தெமட்டகொட உள்ளிட்ட பிரதேசங்களிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வெலிக்கடையில்

வெலிக்கடை பொலிஸ் பிரிவின் ராஜகிரிய சப்புமல் பகுதியில் நுகேகொடை போதைப்பொருள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குழு, சனிக்கிழமை (11) முன்னெடுத்த சுற்றிவளைப்பில் 5 கிராம் 500 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

## தொலைபேசியில் நிதி மோசடி; அறுவர் கைது

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் பகுதியில் பொதுமக்களிடம் தொலைபேசி மூலம் தொடர்புகள் கொண்டு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுவதாகக் கூறி வங்கிக் கணக்கு அட்டையின் இரகசிய இலக்கத்தைப் பெற்று (OTP) பண மோசடியில் ஈடுபட்ட ஆறு இளைஞர்கள் சனிக்கிழமை (11) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெறுமதியான பரிசில்கள் தருவதாக ஏமாற்றி பண மோசடியில் ஈடுபட்டுள்ளதாக புத்தளம் பொலிஸ் நிலையத்தில் மக்கள் முறைப்பாடுகள் செய்துள்ளனர். அந்த முறைப்பாடுகளுக்கு அமைய, புத்தளம் பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்ததுடன், சந்தேகத்தின் பேரில் ஆறு இளைஞர்களைக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட ஆறு பேரும் புத்தளம், பாலாவி மற்றும் கரம்பை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 18 மற்றும் 22 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மாணவி கடத்தல்; சாரதி கைது

இந்த சம்பவம், சனிக்கிழமை (11) காலை வேளையில் இடம்பெற்றுள்ளது. அந்த சிறுமி, ஹந்தெஸ்ஸ பிரதேசத்தில் தங்கியிருப்பவர் என்றும் அவர், தன்னுடைய தோழியுடன் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த போது, வேனில் வந்த இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இந்த கடத்தல் தனிப்பட்ட காரணங்களுக்காக இடம்பெற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், அந்த வான், பொலன்னறுவையில் கைவிடப்பட்டிருந்த நிலையில், அன்றைய தினமே மீட்கப்பட்டுள்ளது. வேன் சாரதி, கம்பளையில் வைத்து தவுலகல பொலிஸாரினால் ஞாயிற்றுக்கிழமை (12) கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான 30 வயதான சாரதி, கம்பளை கஹட்டபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார். கடத்தப்பட்ட சிறுமியை மீட்டெடுப்பதற்கும், கடத்திய சந்தேக நபரை கைது செய்வதற்கும் தற்போதைக்கு மூன்று பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறுமியின் தந்தையின் சகோதரியின் மகனே இந்த சிறுமியைக் கடத்தியுள்ளார் என்றும் அவ்விருவரும் திருமணம் செய்து கொள்வதற்கான இணக்கத்தை இரு வீட்டாரும் முதலில் தெரிவித்துள்ளனர். எனினும், சிறுமியின் தந்தை பின்னர் விருப்பமின்மையை தெரிவித்துள்ளார். இதனால், முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்பது ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என்று மற்றுமோர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தனிநபர் பாவனை வாகன இறக்குமதிக்கு இன்னும் அனுமதியில்லை



சாதாரணமாக இறக்குமதி செய்யப்படும் வாகனத்தின் மீது நான்கு அம்சங்களில் வரி அறவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் ஓர் அங்கமாக அலகு கட்டண சத வீதம் என்பது வாகனத்தின் என்ஜின் கொள்ளளவின் பிரகாரம் அறவிடப்படுவது, இறக்குமதி செய்யப்படும் வாகனத்தின் பெறுமதியில் விசேட இறக்குமதி வரி, வாகன வகுப்பின் பிரகாரம் விசேட சொகுசு வரி மற்றும் மேற்படி சகல வரிகளும் அடங்கலான தொகை மற்றும் வாகனத்தின் CIF பெறுமதியின் மீது பெறுமதி சேர் வரி (VAT) போன்றன அடங்கியிருக்கும்.

இவற்றுக்கு மேலதிகமாக, வாகனம் இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னர், சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி (SSCL) மற்றும் வருமான வரி, இறக்குமதி செய்யும் நிறுவனத்தின் இலாப பங்கு போன்றன இலங்கையில் வாகனமொன்றை கொள்வனவு செய்யும் நபருக்கு செலுத்த வேண்டியிருக்கும்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை வாகன இறக்குமதியாளர் சம்மேளனத்தின் செயலாளர் அரோஷ ரொட்ரிகோ தமிழ்மிரருக்கு கருத்து தெரிவிக்கையில், "வணிக மற்றும் தனிநபர் பாவனைக்குரிய வாகனங்கள் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும் திகதி தொடர்பில் தெளிவான அறிவித்தல் வழங்கப்படவில்லை. கடந்த காலங்களில் இந்த விடயம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் சாதகமான பதில்களை வெளியிட்டிருந்த போதிலும், இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் இன்னமும் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளவில்லை.

அத்துடன், இறக்குமதி செய்யப்படக்கூடிய வாகனங்களின் வயது தொடர்பில் தவறான சில கருத்துகள் சமூக வலைத்தளங்களில் பரப்பப்படுகின்றன. சனிக்கிழமை (11) வெளியாகிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், தனிநபர் பாவனைக்கான கார்கள் இறக்குமதியின் போது, 3 வருடங்கள் வரை பழமையான வாகனங்கள் மாத்திரமே இறக்குமதி செய்யப்பட அனுமதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சில தரப்பினர், பத்து வருடங்கள் வரை பழமையான வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்படும் என தவறான அர்த்தத்தைச் சேர்க்கின்றனர். குறித்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், கொங்கிறீற் மிக்சர்கள் போன்ற விசேட வகையைச் சேர்ந்த வாகனங்கள் மாத்திரமே பத்து வருடங்களுக்கு உட்பட்டதாக இருந்தால் இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்கப்படும்" என்றார்.

உள்நாட்டில் காணப்படும் பயன்படுத்திய வாகனங்களின் பெறுமதிகளில் பெருமளவு தாக்கம் ஏற்படாத வகையில் புதிய வாகனங்கள் இறக்குமதியின் போது விலைகள் குறித்து கவனம் செலுத்தப்படும் என அண்மையில் தனியார் ஊடகமொன்றில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் வழங்கியிருந்த செவ்வியில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# புளி 2,000 ரூபாய்

பற்றாக்குறை காரணமாக, அதிகபட்ச சில்லறை விலை ரூ.350-400க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ கிராம் புளியின் விலை, ரூ.2,000க்கு விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நாட்களில் புளிய மரங்களில் அறுவடை இல்லை என்றும், மார்ச் மாத இறுதியில் புளி அறுவடை முடியும் வரை இந்தப் பற்றாக்குறை தொடரும் என்றும் வியாபாரிகள் கூறியுள்ளனர்.

சைவ உணவு தயாரிப்புகளில் புளியை அதிகமாகப் பயன்படுத்துவதுடன்,ரசத்துக்கும் புளி மூலப்பொருளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழக மீனவர்கள்...

8 மீனவர்களும் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்படவுள்ளனர். கடந்த 2024ஆம் ஆண்டு 72 படகுகள் சிறைபிடிக்கப்பட்டு 554 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் சந்திரசேகர்...




வைக்கப்பட்டது

இம்மாநாட்டிற்கு சிறப்பு விருந்தினராக இலங்கையிலிருந்து கடற்றொழில் நீரியல் வள மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினராக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சரின் ஆலோசகரும் பிரத்தியேக செயலாளருமான கலாநிதி பி.பி.சிவப்பிரகாசமும் கலந்துகொண்டார்.

# சிவனொளிபாதமலை...

அத்துடன், கடுமையான குளிரான காலநிலையும் தோன்றியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

பிரதான வீதிகளில் அதிகளவில் பனி மூட்டம் காணப்படுகிறது. இதனால் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் வாகன சாரதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

நீண்ட விடுமுறை என்பதால், சிவனொளிபாதமலைக்கு உள்நாட்டு, வெளிநாட்டு யாத்திரிகர்கள் வருகையும் அதிகரித்துள்ளது,

அத்துடன், சிவனொளிபாதமலைக்கு செல்லும் படிக்கட்டுகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளதால், யாத்திரிகர்கள் மிகவும் அவதானமாக செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# தொலைபேசியில் நிதி மோசடி; அறுவர் கைது

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாய் பணம் 6 கையடக்கத் தொலைபேசிகள், 9 வங்கி அட்டைகள், சிம் அட்டைகள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் புத்தளம் பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பன்முக ஆளுமை படைத்த அந்தனி ஜீவா காலமானார்



சிந்தாமணி, சிரித்திரன், அமுதம், தேசபக்தன், நவமணி உள்ளிட்ட பல்வேறு இதழ்களில் கட்டுரைகள், சிறுகதைகள் எழுதியுள்ளார்.

நாடகத்துறையிலும் பங்களித்துவரும் இவர் எழுதிய முதல் நாடகமான 'முள்ளில் ரோஜா' 1970 இல் மேடையேறியது. 1970களில் தொழிலாளர் வர்க்கப் பிரச்சினைகளைக் கருப்பொருளாகக் கொண்ட அக்கினிப்பூக்கள், வீணை அழுகின்றது முதலான நாடகங்களை உருவாக்கினார்.

மலையக இலக்கியங்களையும், இலக்கிய கர்த்தாக்களையும் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் என்ற பெருமையும் அந்தனி ஜீவாவுக்கு உண்டு.

மலையகத்தில் தமிழ் வளர்த்தோரும், கலை வளர்த்தோரும், மலையக மக்களிடம் உரத்த சிந்தனைகளை விதைத்தோரும், மலையக மக்களின் விடுதலைக்கு உழைத்தோரும் எனப் பன்னிருவர் பற்றிய தகவல்கள் அடங்கிய 'மலையக மாணிக்கங்கள்' என்னும் நூலை 1998ஆம் ஆண்டு கொழும்பு துரைவி வெளியீடாக கொண்டு வந்தார்.

அந்நூலில், மலையக மக்களின் முன்னேற்றத்துக்காக உழைத்த முன்னோடிகளான கோ.நடேசய்யர், மீனாட்சி அம்மையார், பெரி.சுந்தரம், இராமானுஜம், ஜெ.எஸ்.பெரோ, ஜார்ஜ் ஆர்.மேத்தா, மலையக காந்தி ராஜலிங்கம், வி.கே.வெள்ளையன், சி.வி.வேலுப்பிள்ளை, ஏ.அஸீஸ், சோமசுந்தரம், அசோகா பி.டி. ராஜன் ஆகியோர் பற்றிய பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

கொழும்பு நாவல திறந்த பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத் துறையில் டிப்புளோமா பட்டம் பெற்ற அந்தனி ஜீவா தினபதி, செய்தி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் பணியாற்றியுள்ளார்.

கொழுந்து, குன்றின் குரல் சஞ்சிகைகளின் ஆசிரியராகவும், லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் வெளியிட்ட ஜனசக்தி என்ற மாத இதழின் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

அன்றைய இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி 31.10.1984 அன்று சுட்டுகொல்லப்பட்டதன் எதிரொலியாக தினகரன் இதழின் வாரமஞ்சரியில் 'அன்னை இந்திரா' தொடராக எழுதிய கட்டுரைகளின் தொகுப்பானது நூலாகவும் வெளிவந்தது.

அத்துடன், ஈழத்தில் தமிழ் நாடகம் (1981), அன்னை இந்திரா (1985), காந்தி நடேசையர் (1990), மலையகமும் இலக்கியமும் (1995), முகமும் முகவரியும் (1997), மலையக மாணிக்கங்கள் (1998), அக்கினிப் பூக்கள் (1999), சி. வி. சில நினைவுகள் (2002) குறிஞ்சிக் குயில்கள் (2002), மலையகத் தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு (2002), மலையகம் வளர்த்த கவிதை (2002), கண்டி மாவட்டத் தமிழர்களின் வரலாற்றுப் பதிவுகள் (2002), திருந்திய அசோகன் (2003), நெஞ்சில் பதிந்த ஐரோப்பிய பயணம் (2003), மலையகத் தொழிற்சங்க வரலாறு (2005), சிறகு விரிந்த காலம் (2007), ஒரு வானம்பாடியின் கதை (2014) போன்ற நூல்களை அந்தனி ஜீவா எழுதியுள்ளார். மலையக பெண்களின் எழுத்துக்களை தொகுத்து குறிஞ்சி மலர்கள் (சிறுகதைகள், 2000), குறிஞ்சிக் குயில்கள் (கவிதைகள், 2002), அம்மா(சிறுகதைகள், 2004) போன்ற தொகுப்புக்களையும் வெளியிட்டுள்ளார். அத்துடன் இவர் அரச சாகித்திய விருது, அரச இலக்கிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

மலையகத்தின் தேர்ந்த 21 பெண் கவிஞர்களின் கவிதைகளை தொகுத்து 'குறிஞ்சிக் குயில்கள்' என்னும் நூலினை 2002ஆம் ஆண்டு உலக மகளிர் தினத்தினை முன்னிட்டு கொண்டு வந்தார்.

'அம்மா' என்ற தலைப்பில் 25 இலங்கை பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளை தொகுத்து, சென்னை கலைஞன் பதிப்பகத்தின் மூலம் கொண்டு வந்தார். பெண் படைப்பாளர்களை கொழுந்து இதழ்களில் அறிமுகப்படுத்தியவர் அந்தனி ஜீவா.

மலையகத்தில் 1980களில் வீதி நாடகங்களை முதன் முதலில் ஆரம்பித்தவர் என்ற பெருமை அந்தனி ஜீவா அவர்களையே சேரும்.

அத்துடன், அவர் 14 நாடகங்களை மேடையேற்றியுள்ளார். அன்னாரின் மறைவுக்கு தமிழ்மிரர் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

# போதைப்பொருளுடன் இரு பெண்கள் உட்பட11 பேர் கைது

ஐஸ் என்ற போதைப்பொருளை பறிமுதல் செய்யப்பட்டதுடன் வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் அவரை ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், ராஜகிரிய பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. வெலிக்கடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### தலங்கமயில்

தலங்கம பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு, தலங்கம பொலிஸ் பிரிவின் கொஸ்வத்த பகுதியில் சனிக்கிழமை (11) மாலையில் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் சோதனை நடத்தி, 10 கிராம் 600 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த நபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொஸ்வத்த பிரமதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. தலங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### பாணந்துறையில்

பாணந்துறை மொடராவில அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் சனிக்கிழமை (11) நடத்தப்பட்ட சிறப்பு சோதனை நடவடிக்கையின் போது, பாணந்துறை பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் அதிகாரிகள் குழு, 05 கிராம் 210 மில்லிகிராம் ஹெராயின் போதைப்பொருளை வைத்திருந்த பெண்ணொருவரை கைது செய்தது. அத்துடன், 05 கிராம் 510 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர்கள் இருவரும், பாணந்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 27 வயதுடையவர் என்றும் பெண் 42 வயதுடையவர் எனவும் இருவரும் பாணந்துறையைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாணந்துறை தெற்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### அஹுங்கல்லயில்

அஹுங்கல்ல பொலிஸ் பிரிவின் பாபிலமல்பொகுன பகுதியில் சனிக்கிழமை (11) அதிகாலை நடத்தப்பட்ட சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, அஹுங்கல்ல பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு 06 கிராம் ஹெராயின் போதைப்பொருளை வைத்திருந்த ஒரு சந்தேக நபரை கைது செய்தது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அஹுங்கல்ல பகுதியைச் சேர்ந்த 20 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. அஹுங்கல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### கல்கிசையில்

கல்கிசை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு, படோவிட்ட பகுதியிலும், கல்கிசை பொலிஸ் பிரிவின் நான்காவது வாயிலுக்கு அருகிலும் மூன்று முறை சோதனை நடத்தி, மூன்று சந்தேக நபர்களைக் கைது செய்தனர். அவர்களிடமிருந்து முறையே 11 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ், 11 கிராம் 200 மில்லிகிராம் ஹெராயின் மற்றும் 06 கிராம் 200 மில்லிகிராம் ஹெராயின். கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 21, 25 மற்றும் 28 வயதுடைய கல்கிசை பகுதியைச் சேர்ந்தவர்கள். என்று தெரிவித்த கல்கிசை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### நுகேகொடையில்

வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவின் புவக்கஹவத்த பகுதியில் நுகேகொட பிரிவு ஊழல் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று, கிடைத்த தகவலின் அடிப்படையில் இரண்டு சோதனைகளை மேற்கொண்டு, 720 மில்லிகிராம் போதைப்பொருளை வைத்திருந்த ஆண் மற்றும் பெண் சந்தேக நபர்களைக் கைது செய்தது. அவர்கள் இருவரிடமிருந்து 11 கிராம் ஐஸ் மற்றும் 565 மில்லிகிராம் 10 கிராம் ஹெராயின் ஆகியன கைப்பற்றப்பட்டு வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 45 வயதுடையவர் என்றும், பெண் 38 வயதுடையவர் என்றும், இருவரும் கொலன்னாவை பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெல்லம்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### மொரட்டுவயில்

மொரட்டுவ பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு, ஒரு ரகசிய தகவலின் பேரில் மொரட்டுவ பொலிஸ் பிரிவின் கோரலவெல்ல பகுதியில் சனிக்கிழமை(11) சோதனை நடத்தி, 05 கிராம் 80 மில்லிகிராம் ஹெராயினுடன் ஒருவரைக் கைது செய்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மொரட்டுவெல்ல பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. மொரட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### தெமட்டகொடயில்

கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று, கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், தெமட்டகொட பொலிஸ் பிரிவின் ஆராமயா சாலைப் பகுதியில் சனிக்கிழமை (11) சோதனை நடத்தி, 08 கிராம் 500 ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த ஒருவரை கைது செய்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தெமட்டகொட பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. கொழும்பு குற்றப்பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

### பேலியகொடயில்

பேலியகொட பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினால் பேலியகொட பொலிஸ் பிரிவின் மல்வத்த பிரம்பதேசப் பகுதியில் நடத்தப்பட்ட சோதனையில், 06 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பேலியகொட பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. பேலியகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# விவேகானந்தரின் பிறந்த தினம் அனுஷ்டிப்பு...

**க.அகரன்**

சுவாமி விவேகானந்தரின் 162ஆவது பிறந்த தின நிகழ்வு, வவுனியா புகையிரத நிலைய வீதியிலுள்ள நினைவுத் தூபியில் ஞாயிற்றுக்கிழமை (12) காலை இடம்பெற்றுள்ளது.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் மற்றும், வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அவரது சிலைக்கு, மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அவர் தொடர்பான நினைவுரைகளை தமிழ்மணி அகளங்கன் மற்றும் மாணவர்கள் வழங்கியுள்ளனர்.

நிகழ்வில் சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத் தலைவர் ப.சத்தியநாதன் மற்றும் உறுப்பினர்கள், நகரசபை செயலாளர் அ.பாலகிருபன், உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்க தலைவர் ரவீந்திரன், சமூக ஆர்வலர்கள், பொது மக்கள்,மாணவர்கள் என பலர் கலந்துகொண்டுள்ளனர்.















கடற்கரையோர சுற்றுச் சூழலை நாசம் பண்ணுதல்

# “நாட்டுக்கே கேடாகும்”

**ஏ.எச்.ஏ.ஹூஸைன்**

சுற்றுச் சூழல் பாதுகாப்பை மேம்படுத்தி, பல்லுயிர்த் தன்மையைப் பாதுகாத்து, ஆரோக்கியத்தைப் பேணும் வகையிலமைந்த இயற்கையைத் தக்க வைத்துக் கொள்ளும் கூட்டிணைந்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் தங்கராஜா திலீப்குமார் தெரிவித்துள்ளார்.

‘வீ எபெக்ற்’ நிறுவனத்தின் நிதி அனுசரணையில் வாகரைப் பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்புடன் இளைஞர் அபிவிருத்தி அகம் சல்லிமுனைப் கடற்கரையோரப் பிரதேசத்தில் மக்கள் பங்களிப்புடனான துப்புரவாக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

வாகரைப் பிரதேச சபை ஊழியர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம மட்ட கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள், கரையோர சமூக மக்கள், சுற்றுச் சூழல் நேய ஆர்வலர்கள், ஆகியோரின் பங்குபற்றலுடன் கடற்கரையோ சுத்தமாக்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.




விழிப்புணர்வூட்டும் இந்த கரையோர கழிவகற்றல் நிகழ்வுபற்றி கருத்துத் தெரிவித்த திலீப்குமார்,

கடற் கரையோர நீர்நிலைகள் மாசுபடுவதைத் தவிர்த்து மீன் வளத்தையும் இன்னபிற கடல் வாழ் உயிரினங்களையும் பாதுகாத்து உயிரினப் பல்வகை இயற்கை வழி இயங்கியலை தக்க வைத்துக் கொள்வதே இதன் நோக்கமாகும்.

மேலும், இதன் மூலம் சமூக மட்ட ஆதரவுடன் நிலைபேறான சமுதாய சுற்றுச் சூழல் அபிவிருத்தியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அக்கறையற்ற விதத்தில் கடற்கரை யோரங்களில் உள்ள நீரேந்துப் பகுதி களில் வீசப்படும் திண்மக் கழி வுகள், பிளா ஸ்ரிக் கழிவுகள் அகியவை அப்பிரதேசங்களில் மட்டுமன்றி, அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கடல் நீரினால் அது எங்கெங்கு அடித்துச் செல்லப்படுமோ அங்கெல்லாம் பல்லுயிர்த் தன்மைக்கும் கடல், வாவி வாழ் உயிரினங்களுக்கும் தாவரங்களுக்கும் மனிதர்களுக்கும் பெருத்த பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

இதனால் நம் நாட்டுக்கு வருமானத்தை ஈட்டித் தரும் சுற்றுலாத் துறையும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. மனோரம்மியமான அழகிய இயற்கை எழில் கொஞ்சும் கடற்கரைப் பிரதேசங்கள் திண்ம, திரவக் கழிவுகளால் அசிங்கப்படுத்தப்படுவதால் சுற்றுலாப் பயணிகள் அப்பிரதேசங்களுக்குச் செல்ல சங்கடப்படுகிறார்கள்.

அத்துடன், கழிவுகளை முறையற்ற விதத்தில் வீசுதல் பேரழிவு தரும் சுற்றுச்சூழல் பிரச்சினையாக தற்போது உருவெடுத்துள்ளது. இதனைக் குறைத்து காலப்போக்கில் சுற்றுச்சூழல் அழிவை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் பிரதேச மக்களின் முழுமையான விழிப்புணர்வுடன் கூடிய இந்த மக்கள் பங்களிப்புடனான வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

இயற்கைச் சூழலைப் பேணும் வகையில், இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனம், வருடாவருடம் தேசிய கடல் சார் வளங்களைப் பாதுகாக்கும் தேசிய வேலைத் திட்டம் சர்வதேச இடர் அபாயக் குறைப்பு தின வேலைத் திட்டம், உலக சூழல் தின அமுலாக்க வேலைத் திட்டம், ஆகியவற்றில் பங்களிப்புச் செய்தும் மக்களை விழிப்பூட்டியும் வருகிறது” என்றார்.

சல்லிமுனையில் இடம்பெற்ற விழிப்புணர்வூட்டல் கடற் கரையோர துப்புரவாக்கும் பணிகளில் பனிச்சங்கேணி கிராம அலுவலர் கே. மதிகரன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மாலதி விவேகானந்தன், வாகரைப் பிரதேச சபை ஊழியர்கள், இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவன களப்பணி அலுவலர் ஏ.சஞ்ஜித் ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

50 மாணவர்கள் சுகயீனம்

# விசாரணைகள் முன்னெடுப்பு



ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட டிக்கோயா ஸ்ரீவாணி ஆரம்ப பாடசாலையில் கல்வி பயிலும் சுமார் 50 மாணவர்களுக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து சனிக்கிழமை (11) அன்று குறித்த பாடசாலைக்குச் சென்ற அம்பகமுவ சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் பொது சுகாதார பரிசோதகர்கள், இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மேற்படி, பாடசாலையில் 1, 2ஆம், 3, 4ஆம் மற்றும் 5ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களில் 50 பேரே இவ்வாறு, திடீரென சுகயீனமடைந்துள்ளனர்.

குறித்த மாணவ, மாணவிகளுக்கு வெள்ளிக்கிழமை (10) மாலை முதல் தலைச்சுற்றல், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகள் தென்பட்டதையடுத்து, பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை டிக்கோயா-கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

50 மாணவர்களில் 25 மாணவர்கள் டிக்கோயா-கிளங்கன் ஆதார வைத்தியசாலையிலும், ஏனைய 25 மாணவர்கள் ஹட்டன் நகரத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 25 மாணவர்களில் 22 மாணவர்கள் சிகிச்சைக்குப் பிறகு வீடு திரும்பியுள்ளனர்.

மீதமுள்ள மூன்று மாணவர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாணவர்களின் நிலைமை பாரதூரமாக இல்லை எனவும் வைத்தியசாலையில் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவ தினமான வெள்ளிக்கிழமை (10) காலை பாடசாலையில் மாணவர்களுக்கு காலை உணவாக சோறு, போஞ்சி, பருப்பு மற்றும் கீரை ஆகியவற்றை வழங்கியதாகவும், எனினும், அந்த உணவை சாப்பிடாத மாணவர்களும் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.









உயர் நீதிமன்ற நீதியரசர்களாக

# நால்வர் சத்தியப்பிரமாணம்

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் நால்வர், ஞாயிற்றுக்கிழமை (12) அன்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

அதன்படி, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான ஆர்.எம்.எஸ்.ராஜகருணா, மேனகா விஜேசுந்தர, சம்பத் பி.அபேகோன் மற்றும் எம்.எஸ்.கே.பி.விஜேரத்ன ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் உயர் நீதிமன்ற நீதியரசர்களாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுமந்திரன், சாணக்கியனுக்கு கௌரவம்

**ஏ.எச்.ஏ.ஹூஸைன்**

தமிழ்நாட்டின் சென்னையில் சனிக்கிழமை (11) நடைபெற்ற உலக அயலகத் தமிழர் தினம்2025 இல் கலந்து கொண்ட தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான இரா. சாணக்கியன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழக மாநில அரசு, தென்னிந்திய வர்த்தக, தொழில்துறை சங்கம் ஆகியவற்றினால் இந்த கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும், மக்களவையின் உறுப்பினரான கனிமொழியை சந்தித்து, ஈழத் தமிழ் மக்கள் எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகள் சம்பந்தமாகவும் மத்திய அரசில் தமிழ் நாட்டின் குரலை எமக்காக தொடர்ந்து எழுப்புவது சம்பந்தமாகவும் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொங்கல் பொங்குவதற்கு சிவப்பு அரிசியும் தேங்காயும் வேண்டும்

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு பின்னர், எந்தவோர் இனங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, மிக கச்சிதமாக விழாக்களைக் கொண்டாடுகின்றனர்.

அந்தளவுக்கு ஒவ்வொரு மனிதனையும் விலைவாசி வாட்டி வதைத்துக் கொண்டு இருக்கிறது. தலையைத் தூக்க முடியாத அளவுக்கு விலைவாசி அதிகரித்திருக்கும் நிலையில், பொருட்களுக்கான தட்டுப்பாட்டுக்கு அளவே இல்லை. இன்னும் சில பொருட்களின் விலைகள், கிலோ கிராம் ஒன்றுக்கு 1,000 ரூபாய் 2,000 ரூபாய் என அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

பொங்கலும் நெருங்கிக்கொண்டு இருக்கிறது. எனினும், பச்சை அரிசி மற்றும் தேங்காய்களுக்கு தட்டுப்பாடு இன்னுமே நீக்கப்படவில்லை. ஆகையால், பொங்கல் பொங்குவதில் பலரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பச்சை அரிசி பிரச்சினைக்குத் தீர்வு காண வலியுறுத்தி, ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. எனினும், அரசாங்கம் அதைக் கவனத்தில் கொள்ளவில்லை என்பது தெரிகிறது.

தமிழர்கள் எண்ணற்ற விழாக்களைக் கொண்டாடி மகிழ்கின்றனர். அவற்றில் மிகவும் முக்கியமான விழாவாகக் கொண்டாடப்படும் தமிழர் திருநாள் என்று அழைக்கப்படும் பொங்கல் திருநாள் ஆகும் உலக வாழ் தமிழர்கள் இந்த திருநாளை, தை மாதம் 15ஆம் திகதியன்று கொண்டாடுவதற்குத் தயாராகி வருகின்றனர்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தமிழர் தம் இறைவனான சூரியனுக்கு நன்றி செலுத்தும் விதமாகக் கொண்டாடுகின்றனர். இப்பொங்கல் பண்டிகையானது நான்கு நாட்கள் கொண்டாடப்படுகிறது.

பொங்கல் பண்டிகையின் முதல் நாள் போகி ஆகும். பழையன கழிதல் புதியன புகுதல் என்பது போகி தினத்தின் சாராம்சமாகும். தமிழர் தம் வேளாண்மைச் சுழற்சியில் கடைசி நாள் இதுவாகும். இது மார்கழி கடைசி தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. தற்போதைய காலங்களில் வீட்டில் உள்ள பழைய பொருட்களை மாற்றும் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

தைப் பொங்கலானது இரண்டாவது பொங்கல் தினமாகும். குறிப்பாக தை மாதத்தின் முதல் நாள் கொண்டாடப்படுகிறது.விளைவித்த பயிர்களை அறுவடை செய்ய அத்தனை நாளும் உழவர் தமக்கு உதவிய சூரியனுக்குப் பொங்கல் வைக்கும் தினமாகும். அன்றைய தினம் குளித்து புத்தாடை அணிந்து நண்பர்களுடனும் உறவினர்களுடன் இணைந்து கொண்டாடி மகிழ்வர்.

வேளாண்மைக்கு உறுதுணையாக இருக்கும் விலங்குகள் மற்றும் கால்நடைகளுக்கு நன்றி கூறும் விழா மாட்டுப் பொங்கல் ஆகும். இது மூன்றாம் நாள் விழாவாகும். விவசாயத்திற்கு உறுதுணையாக இருக்கும் காளை மாட்டிற்கும் இல்லத்தைச் செழிப்புறச் செய்யும் பசு மாட்டிற்கும் பொங்கலிடும் நாளாகும்.

அன்றைய தினம் மாடுகளின் இடங்கள் சுத்தம் செய்யப்பட்டு மாடுகளைக் குளிப்பாட்டி, கொம்பு சீவி, வண்ணம் பூசி, உழவுக் கருவிகள் அனைத்தையும் வைத்து படையல் வைத்துப் பொங்கி மகிழ்வர்.

நான்காவது நாள் கொண்டாடப்படும் விழா காணும் பொங்கலாகும் இதில் உற்றார் உறவினரைச் சந்தித்தல், பெரியவர்களிடம் ஆசி பெறுதல், விளையாட்டுகள் போன்ற நிகழ்ச்சிகளுடன் மகிழ்ச்சியாகக் கொண்டாடுவார்கள்.

பொங்கல் பண்டிகை தமிழர்களின் நன்றி மறவாமை பண்பினை உலகிற்கு பறை சாற்றுவதாக இருந்தாலும், பலரும் பொங்கல் பொங்குவதற்கு இயலாத நிலையில் உள்ளனர் என்பதே உண்மையாகும். ஆகையால், இந்த விடயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

விருப்புடனும் வெறுப்புடனும் மனித வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்த நிலைமைக்குப் பல காரணங்களும் உண்டு. சக்கரம் சுழலும் போது மாறி, மாறி அதே இடத்துக்கு வந்து, மீண்டும் பழையபடி, அதே மாதிரியே நடக்கும். சந்தோசம் வரும்போது தன்னை மறக்கின்றான். சில சமயம் கஷ்டங்கள் வரும்போது, அதுவே, நிலையானது போல, கண்ணீர் விட்டு அழுகின்றான்.

மீண்டும் நல்லவை நடந்தால், மகிழ்ச்சி. பின்னர் துயரம் என வந்து போகும் வாழ்க்கை சகஜமானது எனத் தெரிந்தும் கூட எவருமே பரோணமான வாழ்க்கை நிலையை உணர்வதில்லை.

எல்லாமே வந்துபோகும் என்பதால் மயக்கம் எதற்கு? நிரந்த அமைதி எப்போது வரும் எனப் பலர் அங்கலாய்க்கின்றார்கள்.

வாழ்க்கை நிலையாமையை அறிந்து தெளய ஞானம் வேண்டும் என ஆத்மிகம் சொல்கின்றது.

இதை உணர்ந்திட மனம் சலனப்படாத நிலைமை அடைந்திட வேண்டும். ஆசை, மோகம், சலனம் அகன்றால், ஆத்மா நிம்மதியடையும்.

நன்றி–பருத்தியூர் பாலவயிரவநாதன்

# அரசியல் கைதிகளின் விடுதலையும் நீதியும்

**லக்ஸ்மன்**

நாட்டின் முன்னேற்றத்திற்காக எதை முதலில் செய்ய வேண்டும் என்பதைப் பற்றிய யோசனையின்றி 'கிளீன் ஸ்ரீலங்கா' என்ற பெயரில் ஒரு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. நாட்டில் புரையோடிப்போய் இருக்கின்ற தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வின்றி உருவாக்கப்படும் இதுபோன்ற எந்த ஒரு செயற்பாடும் முன்னேற்றத்தைக் கொண்டுவரப்போவதில்லை என்ற தெளிவு எப்போது ஏற்படுகிறதோ அன்றுதான் நாட்டிற்கு விடிவு ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

நீண்டகாலமாக விசாரணையின் பேரில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி வடக்கு, கிழக்குத் தழுவி முன்னெடுக்கப்படும் கையெழுத்துப் போராட்டம் வெற்றி பெறுமா? இல்லையா? என்பது இப்போதைக்கு நம்முடைய விவாதமல்ல. ஏன்? அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். அவர்கள் விடுதலை செய்யப்படாமைக்கான காரணங்கள் எவை என்பதை ஆராய வேண்டும்.

இலங்கையில் ஆயுத யுத்தம் மௌனத்துக்கு வந்து 15 வருடங்கள் கடந்து விட்டது. ஆனால், தமிழர்களின் போராட்டத்துடன் சம்பந்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களில் எஞ்சியிருப்பவர்கள் இதுவரையில் விடுவிக்கப்படவில்லை. அதற்கான போராட்டங்கள் பல இதற்கு முன்னரும் நடைபெற்றிருக்கின்றன. தற்போது நடைபெறும் முயற்சி முதல் முயற்சியுமல்ல.

சிறு சிறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தாலும், 2010 ஜனவரியில் விசாரணை செய் அல்லது விடுதலை செய் என்ற கோரிக்கையை முன்வைத்து கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் 380 பேரும் புதிய மகசின் சிறைச்சாலையில் 98 பேரும், அனுராதபுரம் சிறைச்சாலையில் 28 பேரும், யாழ்ப்பாணத்தில் 24 பேரும், மட்டக்களப்பில் 17 பேரும், வெலிக்கடையில், கண்டியில் 24 பேரும், 6 பேருமென 577 பேர் இந்த சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்த உண்ணாவிரதம் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தது.

2017 ஒக்டோபர் ஆரம்பத்தில், தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரியும் அவர்கள் மீதான வழக்குகளைத் தென் பகுதி நீதிமன்றத்துக்கு மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் வவுனியாவில் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் போராட்டமொன்று நடைபெற்றது. தமிழ் அரசியல் கைதிகள் மூவரின் வழக்குகளை, வவுனியா மேல் நீதிமன்றத்திலிருந்து அனுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு மாற்றிய வேளையில், 14 நாட்களாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டிருந்தது. அதன் பின்னரும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் மீண்டும் கைது செய்யப்பட்ட போராளிகளும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுவிக்க வலியுறுத்தி ஜனாதிபதியிடம் கையளிக்கும் நோக்கில் மனுவில் கையெழுத்து பெறும் பிரசாரம் போராளிகள் நலன்புரிச் சங்கத்தினால், கடந்த 2024ஆம் ஆண்டு டிசெம்பர் 28ஆம் திகதி வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்ட கையெழுத்து சேகரிப்பு பிரச்சாரம், டிசெம்பர் 30ஆம் திகதி மன்னாரிலும், 2025ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி முல்லைத்தீவிலும், 3ஆம் திகதி கிளிநொச்சியிலும் முன்னெடுக்கப்பட்டு கிழக்கின் மட்டக்களப்பில் சனிக்கிழமையும், அம்பாறையில் ஞாயிற்றுக்கிழமையும் இன்றைய தினம் திங்கட்கிழமை திருகோணமலையிலும் நடைபெறுகிறது.

அதேநேரம், சிறுபான்மையினருக்கு எதிரானது என உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வரும் பயங்கரவாத தடைச் சட்டத்தை தற்போதைய அரசாங்கம் இல்லாதொழிக்க வேண்டுமெனப் போராளிகளின் நலன்புரிச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. யுத்தம் முடிவடைந்த பின்னர் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் தேர்தலில் வெற்றி பெறுவதற்குத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பயன்படுத்தி இருக்கிறது.

ஆனால், அரசியல் கைதிகளின் விடுதலை, பயங்கரவாத தடைச்சட்டத்தின் நீக்கம், அரசியல் தீர்வு விடயங்களை மறந்து விடுவதே நடைபெற்று வந்திருக்கிறது. ஜே.வி.பியைத் தலைமையாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இவற்றினை மறந்துவிடக்கூடாது என்பதற்கான ஞாபகப்படுத்தலாகக் கூட இந்தப் போராட்டத்தைக் கொள்ள முடியும். நல்லிணக்கத்துக்கான முயற்சியாகவும் இதனைச் சொல்ல முடியும்.

20, 25 வருடங்களுக்கு மேலாக அரசியல் கைதிகளாக இருக்கும் அந்த அரசியல் கைதிகளின் விடுதலை நல்லிணக்கத்துக்கான தொடக்கமாக இருக்கும் என்பது தமிழ் மக்களின் நல்லெண்ணமாகும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் அரசியல் கைதிகள் தவிர்க்க முடியாதவர்களாகும். 1983 ஜூலையில் வெலிக்கடை சிறைச்சாலையில் 55இற்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் கொல்லப்பட்டமைக்கு, இதுவரை நீதி கிடைக்கவில்லை. மன்னிப்பும் எந்த அரசாங்கத்தினாலும் கேட்கப்படவில்லை. 1983 கறுப்பு ஜூலை படுகொலைகளின்போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் கொல்லப்பட்டவர்கள் தமிழ் அரசியல் கைதிகளே.

வெலிக்கடையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ரெலோ அமைப்பின் தலைவர் உட்பட 54 தமிழ் அரசியல் கைதிகள், அவர்களைப் பாதுகாக்க அழைக்கப்பட்ட படைகள் மற்றும் சிறை அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்புடன் அவர்களது அறைகளிலேயே சிங்களக் கைதிகளால் வெட்டிக் கொல்லப்பட்டனர். 1983ஆம் ஆண்டு ஜூலை 25ஆம் திகதி, மனிதாபிமானமற்ற முறையில் கொல்லப்பட்ட குட்டிமணி உள்ளிட்ட 35 பேரின் சடலங்கள் சிறைச்சாலை முற்றத்தில் உள்ள புத்தர் சிலைக்கு முன் குவிந்திருந்த நிலையில், சடலங்களுக்கு மத்தியில் உயிருடன் இருப்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அடித்துக் கொல்லப்பட்டனர்.

ஜூலை 2ஆம் திகதி, தமிழ்க் கைதிகள் அடைக்கப்பட்டிருந்த முதல் மாடியில் உள்ள இளைஞர் அறையை சிங்களக் கைதிகள் முற்றுகையிட்டதால், காந்திய இயக்கத் தலைவர் வைத்தியர் ராஜசுந்தரம் உட்பட 18 பேர் கொல்லப்பட்ட நிலையில், உயிருக்குப் போராடி உயிர் பிழைத்தவர்களில் தற்போதைய மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பனாகொட மகேஸ்வரன் என்கிற தம்பிப்பிள்ளை மகேஸ்வரன், ஈரோஸ் அமைப்பின் அந்தோணிப்பிள்ளை அழகிரி, காந்தி இயக்கத்தைச் சேர்ந்த எஸ்.டேவிட் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 41 பேரில் 27 பேர், 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் 25ஆம் திகதி அதிகாலை வெட்டியும், குத்தியும் கொலை செய்யப்பட்டதோடு, மேலும் 14 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பிந்துனுவெவ படுகொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பண்டாரவளை மற்றும் தியத்தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உட்பட 19 பொலிஸ் உத்தியோகத்தர்கள், பிந்துனுவெவ கிராமத்தைச் சேர்ந்தவர்களுமாக 41 பேர் அடங்குவர். 2003ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட இரண்டு பொலிஸ் அதிகாரிகள் உட்பட நால்வரையும் 2005 மே 17ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் விடுவித்திருந்தது.

இருப்பினும் இப் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்த மலையக இளைஞர்களுக்கு எதிரான வழக்கு, இன்னமும் இடம்பெற்று வருகிறது.

தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டமை, தாக்கப்பட்டமை என பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. இருந்தாலும், நடைபெற்றவைகள் மறக்கப்பட்டவையாக மாறிவிட்ட நிலையில். மாற்றம் மாற்றம் என பேசிக்கொண்டு செயல்படும் அரசு தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் கரிசனை செலுத்த வேண்டும் என்பதே இப்போதைய கோரிக்கையாக இருக்கிறது. படிப்படியாக விடுவிக்கப்பட்டு வந்திருக்கின்ற அரசியல் கைதிகளில் மிகுதியானவர்கள் 10 பேர் வரையிலேயே தற்போது சிறைகளில் வாடி வருகின்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் கடந்த அரசாங்க காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பொதுமக்கள் கையெழுத்துப் போராட்டத்தில் தற்போதைய ஜனாதிபதி உள்ளிட்டவர்கள் ஆர்வத்துடன் பங்களிப்புச் செய்திருந்தனர். ஆனால், அந்த வேகம் இப்போது இல்லாமலிருப்பது கவலையளிப்பதாகத் தமிழ்த் தலைவர்கள் கருத்து வெளியிடுகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கியவர்கள் மற்றும் அந்த அமைப்புடன் இணைந்து செயல்பட்டவர்கள் என்ற குற்றச்சாட்டுகளின் கீழ் இன்றும் சிறைவாசம் அனுபவித்து வருபவர்கள் விடுவிக்கப்படாமைக்குத் தென்பகுதியில் இருக்கும் புலிகளின் மீளுருவாக்கம் என்ற அச்சம் காரணமா என்றும் சந்தேகம் கொள்ளலாம்.

ஆயுதப் போராட்டம் ஆரம்பிப்பதற்குக் காரணமாக இருந்த காரணிகளை அவ்வாறே வைத்துக் கொண்டு நாட்டில் அனைத்து மக்களிடமும் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது இன்னமும் அப்படியே இருக்கிறது. ஒரு சிறு புள்ளியையேனும் வைக்குமளவிற்குச் சிறையில் வாடும் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்களா என்பது அரசாங்கத்தின் முடிவினை எதிர்பார்ப்பதாகவே இருக்கும். நீதி மறுக்கப்பட்டே இருக்கும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் நீதி மறுக்கப்படும் சமூகமாகவே இருப்பார்களா. பொறுத்திருப்போம். போராட்டத்திற்கு வெற்றி கிடைக்கட்டும்.

## கடிதங்கள்

### வீதியை புனரமைத்து தாருங்கள்



திருகோணமலை-தம்பலகாமம் பிரதேச செயலக பகுதியில் உள்ள தாயிப் நகர் கோயிலடி வைத்தியசாலை வீதி மிகவும் பாதிப்படைந்து காணப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய அரசாங்கம் ஊடாக அபிவிருத்தி செய்யப்பட்ட குறித்த வீதியானது, கார்பட் இடப்பட்ட போதும், ஒரு பகுதியில் பாரிய குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கிறது.

சுமார் 4 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இவ்வீதியை பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணி தாய்மார்கள், அரச ஊழியர்கள் உட்பட பலரும் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வாறு பாதிப்படைந்து கிடக்கும் இவ்வீதி, அவர்கள் போக்குவரத்து செய்வதில் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறித்த வீதி தொடர்பில், தம்பலகாமம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்னாள் தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் எச் தாலிப் அலியால் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

இதற்குப் பதில் அளித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் ஒருவர், குறித்த வீதியில் சிறிய பாலம் ஒன்று அமைக்கப்படல் வேண்டும் என்றார். இருந்த போதிலும் பல வருடங்களாக உரிய சபை அசடையீனமாக காணப்படுவது வருத்தமளிப்பதுடன் இதனை புதிய தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் விரைவில் பூரணமாகத் திறம்படச் செய்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஏ.எச் ஹஸ்பர்

வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில்

# அமானா லைஃப் விஸ்தரிப்பு

அமானா லைஃப் இன்சூரன்ஸ், தனது புத்தாக்கமான மற்றும் வாடிக்கையாளர்களை நோக்காகக் கொண்ட காப்புறுதித் தீர்வுகளை பரந்தளவில் அணுகச் செய்யும் வகையில், வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களுக்கு தனது சேவைகளை உத்தியோகபூர்வமாக விஸ்தரித்துள்ளது. இந்த விரிவாக்க பணிகளுக்கு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜிஹான் ராஜபக்ஷ மற்றும் காப்புறுதித் துறையில் சுமார் 21 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள விற்பனைகள் பிரிவின் உதவி பொது முகாமையாளர் புவிராஜ் ஆகியோர் தலைமைத்துவமளித்திருந்தனர்.

அவரின் சிறந்த தலைமைத்துவ பண்புகளுடன், உயர் திறன் படைத்த அணிகள் மற்றும் திறமைகளை கட்டியெழுப்பல் போன்றவற்றுக்காக தமக்கென நற்பெயரை கட்டியெழுப்பியுள்ளார். மேலும், BSc(Hons), MBA, Certified Professional Marketer - Asia போன்ற உறுதியான கல்விசார் தகைமைகளைக் கொண்டுள்ள இவர், இந்தப் பிராந்தியங்களில் அமானா லைஃப்பின் செயற்பாடுகளுக்கு தமது நிபுணத்துவம் மற்றும் நோக்கத்தை சேர்த்துள்ளார்.

அமானா லைஃப் தமது தயாரிப்பு தெரிவுகளின் அங்கமாக, தங்க நிதியத்தை காப்புறுதிதாரர்களுக்காக அறிமுகம் செய்திருந்தது. அதனூடாக, காப்புறுதி முதிர்வு அனுகூலத்தை தங்கமாக காப்புறுதிதாரர்களுக்கு





பெற்றுக்கொள்ள முடியும். இதன்மூலம், பணத்துக்கு பதிலாக பெறுமதி குன்றாத உறுதியான மாற்றீட்டை காப்புறுதிதாரர்கள் பேண முடியும். இந்த பிரத்தியேகமான வழங்கலினூடாக, அமானா லைஃப் சேவைகளை பெற்றுக்கொடுக்கும் சமூகத்தாரின் தேவைகளையும், தெரிவுகளையும் அறிந்து, அதற்கேற்ற வகையில், தமது சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது.

தங்க நிதியத்துக்கு மேலதிகமாக, அமானா லைஃப் மூலமாக, பரந்தளவு காப்புறுதித் தீர்வுகள் வழங்கப்படுகின்றன. இதில் சிறுவர் கல்வித் திட்டங்கள், ஆயுள் மற்றும் சுகாதார பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் நீண்ட கால சேமிப்புத் திட்டங்கள் போன்றன அடங்குகின்றன. இந்தத் தீர்வுகள், பரந்தளவு தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், அமானா லைஃப்பின் ஒழுங்கு, வாடிக்கையாளர் மையப்படுத்திய சேவைக் கொள்கைகளின் பிரகாரம் அமைந்துள்ளன.

இந்த விரிவாக்கம் தொடர்பில் ராஜபக்ச குறிப்பிடுகையில், "வடக்கு மற்றும் கிழக்கில் எமது பிரசன்னம் என்பது, புவியியல் அமைவிட விரிவாக்கம் என்பதற்கு அப்பாலானது. உறவுகளை கட்டியெழுப்புவது, பொருத்தமான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பது மற்றும் எமது வாடிக்கையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது போன்றவற்றுக்கான எமது அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றது. புத்தாக்கமான மற்றும் தங்கியிருக்கக்கூடிய நிதிசார் தீர்வுகளினூடாக தனிநபர்கள் மற்றும் குடும்பதாரின் எதிர்காலங்களை பேணுவதில் நம்பிக்கையை வென்ற பங்காளராக திகழ நாம் முயற்சிக்கின்றோம்" என்றார்.

சமூக ஈடுபாடு மற்றும் பொருத்தமான தீர்வுகளினூடாக, இந்தப் பிராந்தியங்களில் நீண்ட காலம் நிலைத்திருக்கும் நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்த அமானா லைஃப் எதிர்பார்க்கின்றது. அனைத்து இலங்கையர்களும் தங்கியிருக்கக்கூடிய மற்றும் உள்ளடக்கமான காப்புறுதி சேவை வழங்குநராக திகழும் தமது அர்ப்பணிப்பை மீள உறுதி செய்துள்ளது.

NCE ஏற்றுமதி விருதுகள் 2024இல்

# Star Garments Groupக்கு தங்க விருது

இலங்கையின் ஆடைகள் உற்பத்தித் துறையில் முன்னோடியான நாமமாகவும், தனது சகல செயன்முறைகளிலும் காபன் நடுநிலை சான்றிதழைப் பெற்றுள்ள ஒரே குழும நிறுவனமுமாக திகழும் Star Garments Group (Star),32ஆவது NCE ஏற்றுமதி விருதுகள் வைபவத்தில் ஆடைகள் மற்றும் ஆடை உற்பத்தி பிரிவில் மிகப் பெரிய பிரிவில் தங்க விருதை சுவீகரித்தது.

இலங்கை தேசிய ஏற்றுமதியான சம்மேளனத்தினால் (NCE) வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் இந்த நிகழ்வு, இம்முறை 'Embrace Innovation and Digitalization' எனும் தொனிப்பொருளின் கீழ் முன்னெடுக்கப்பட்டது. கொழும்பு ஷங்கிரி-லா ஹோட்டலில் அண்மையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

2023ஆம் ஆண்டில் சர்வதேச சந்தையில் நிலவிய ஏற்றத்தாழ்வுகள் காரணமாக எழுந்திருந்த பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இந்த கௌரவிப்புStar க்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. சவால்கள் நிறைந்த தொழிற்பாட்டு சூழலிலும், புதிய கையகப்படுத்தல்கள் மற்றும் குழுமத்தின் பன்னிரண்டாவது தொழிற்சாலையாக Kolonna Manufacturing (Pvt) Limited ஐ உள்வாங்கியிருந்தமை போன்றன அடங்கலாக, இலங்கையில் Star தனது பிரசன்னத்தை தொடர்ச்சியாக மேம்படுத்தியிருந்தது.

சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற வர்த்தக நாமங்களுக்கு ஆடை ஏற்றுமதிகளை Star மேற்கொள்வதுடன், ஒழுக்கமான, உயர் தரம் வாய்ந்த ஆடை உற்பத்திக்கான முதல்தர தெரிவாக இலங்கையை ஊக்குவித்த வண்ணமுள்ளது. நிறுவனத்தின் உறுதியான ஏற்றுமதி வினைத்திறனினூடாக, இலங்கையின் வருடாந்த ஆடை ஏற்றுமதி வருமானங்கள் அதிகரிப்பதுடன், 2023ஆம் ஆண்டில் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்திருந்தது. இதனூடாக, உயர் ஏற்றுமதி அளவை பேணுவதுடன், உயர்தரம் வாய்ந்த சர்வதேச விற்பனையாளர்களுடன் பெறுமதி வாய்ந்த பங்காண்மைகளை பேணிய வண்ணமுள்ளது.

இன்று, Star தன்வசம் 10,000க்கும் அதிகமான பணியாளர்களை



கொண்டுள்ளதுடன், இலங்கையில் 12 தொழிற்சாலைகளையும் இயக்குகின்றது. மாதாந்தம் 1.6 மில்லியன் ஆடைகளை தயாரிக்கும் கொள்ளளவு திறனை கொண்டுள்ளது. IFC நிதியளிப்பு வசதியின் கீழ், மேற்கு ஆபிரிக்காவின் Togo பிராந்தியத்தில் பாரியளவிலான ஆடை ஏற்றுமதி தொழிற்சாலையை நிறுவும் திட்டம் நிலவுவதாக குழுமம் அறிவித்திருந்தது.

சூரிய வலுக் கட்டமைப்புகள் மற்றும் கழிவிலிருந்து வலு தொழினுட்பங்களை பின்பற்றுவதனூடாக புதுப்பிக்கத்தக்க வலுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி, காபன் நடுநிலையை Star எய்தியுள்ளது. கட்டுநாயக்கவிலுள்ள Star புத்தாக்க நிலையமானது, இலங்கையின் முதலாவது LEED Platinum கட்டிடமாகும். இதற்கு பிந்திய LEED version 4 சான்றளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தென்கிழக்காசிய பிராந்தியத்தின் முதலாவது 'Passive House Design' ஆகவும் கருதப்படுகின்றது. நிலைபேறான ஆடைகள் ஏற்றுமதியில் சர்வதேச முன்னோடியாக திகழும் இலங்கையின் நோக்கத்துடன் பொருந்தும் வகையில் இந்த முயற்சிகள் அமைந்துள்ளன.

Starஇன் நவீன ஆடை தொழினுட்பங்களினூடாக, நவீன நுகர்வோர் கேள்விகள் பல நிவர்த்திக்கப்படுவதுடன், சூழலுக்கு நட்பான ஆடைகள், ஆடை கழிவு விரயத்தை தணித்தல் மற்றும் அபிவிருத்தி சுழற்சியை 30 சதவீதத்துக்கு அதிகமாக குறைத்தல், துறையில் புத்தாக்கத்தை முன்னெடுத்தல் போன்றன அடங்கலான விடயங்களில் கவனம் செலுத்தப்படுகின்றது. R&D இல் கைகோர்ப்புகளினூடாக, உயிரியல் ரீதியில் உக்கும் ஆடைத் தெரிவுகளுடன், சூழலுக்கு நட்பான சாய பொறிமுறைகளை பின்பற்றுகின்றது. இவற்றினூடாக நிலைபேறான நவநாகரீகத்தில் முன்னோடி எனும் நிலையை ஏற்படுத்தியுள்ளதுடன், R&D அடிப்படையிலான உற்பத்தியில் சர்வதேச மட்டத்தில் போட்டிகரத்தன்மையை ஏற்படுத்துவதில் பங்களிப்பு வழங்குகின்றது.

உலகத் தரம் வாய்ந்த வர்த்தக நாமங்களுக்கு சேவைகளை வழங்கும் Komarகம்பனியின் துணை நிறுவனமாக அமைந்துள்ள Star, இலங்கையின் ஆடை ஏற்றுமதிகள், பிராந்தியத்தின் ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் உயர் பெறுமதிகளை ஏற்படுத்துவதை பேணுவதை உறுதி செய்கின்றது. நாடு முழுவதிலும் Star இனால் முன்னெடுக்கப்படும் சமூக செயற்பாடுகளில், கண்டல் தாவர மறுசீரமைப்பு மற்றும் பல்வேறு சமூக மட்ட நிறுவனங்களுக்கு ஆதரவளித்தல் போன்றன அடங்கியுள்ளன. இலங்கையின் உற்பத்தித் துறையில் பணியாற்றுவதற்கு சிறந்த ஸ்தாபனங்களில் ஒன்றாக தொடர்ச்சியாக Great Place to Work இனால் தரப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையிலும், சர்வதேச ரீதியிலும் Star தொடர்ந்தும் வியாபித்து விரிவாக்கமடைய எதிர்பார்ப்பதுடன், நாட்டின் ஆடை உற்பத்தித் துறையின் பிரதான அரணாக திகழவும் எதிர்பார்க்கின்றது.



# சரணாலயத்தில் ஒப்படைப்பு

திருகோணமலை நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் அதிகரித்துள்ளமையால் நகரசபையின் திட்டத்தின் படி, நகராட்சி மன்றமும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் இணைந்து கால்நடை வைத்தியர்களின் உதவியுடன் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து பட்டனமும் சூழலும் பிரதேச சபையினால் பராமரிக்கப்படும் நாய்களுக்கான சரணாலயத்தில் சனிக்கிழமை (11) ஒப்படைக்கப்பட்டுள்ளன.

– அ.அச்சுதன்











# பொங்கல் பானைகள் வழங்கி வைப்பு

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கம் வல்வெட்டி நலன்புரி சங்கம் கனடா மற்றும் நிழல்கள் அமைப்பு கனடா ஆகியவற்றின் நிதி அனுசரணையில் தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு பொங்கல் பானைகள் வழங்கி வைத்துள்ளன.

மாவட்ட வைத்தியசாலை இளைப்பாறும் மண்டபத்தில் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் க. விஜயசேகரம் தலைமையில் வெள்ளிக்கிழமை (10) நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் பிரபாத் வீரவத்த மற்றும் வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர், நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

– மு.தமிழ்ச்செல்வன்



# விசேட நிகழ்வுகள்






'சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய பணி மூலம் கல்விக்கு கரம் கொடுப்போம்' எனும் தொனிப்பொருளில் புத்தளம் ஆலங்குடா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் அண்மையில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

2023ஆம் ஆண்டு சிறந்த அடைவுகளைப் பெற்ற மாணவ மாணவிகள் மற்றும் பல்கலைக்கழகம் தெரிவான மாணவ மாணவிகளைக் கௌரவிக்கும் வகையிலும், புதிய கண்டுபிடிப்புகளான மோட்டார் சைக்கிள் பொருட்களை வைத்து கார் வண்டியைக் கண்டுபிடித்த மாணவனையும், உப்பு நீர் மூலமாக இயங்கும் மோட்டார் சைக்கிளைக் கண்டுபிடித்த இரண்டு மாணவர்களையும் கௌரவிக்கும் வகையில் சர்வதேச மனித உரிமைகள் இளம் கண்டுபிடிப்பாளர்களைக் கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில், ஆலங்குடா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.எச்.ஏ.சக்கூர், பிரதி அதிபர்களான எம்.ஏ.கலாம், எம்.பி.பைசுர் ரஹ்மான், எம்.ஐ.சிக்கந்தர், சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய பணி கல்வி சார் ஒருங்கிணைப்பாளர் ஐ.எம்.சபூர்தீன், ஆரிஹாமம் பாத்திமா மகளிர் இஸ்லாமியக் கற்கை நிறுவன அதிபர் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய பணி இஸ்லாமியக் கலாசார ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷெய்க் எஸ்.வை.எம்.சிஹான் (ஜமாலி), சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய ணி உறுப்பினர் ரிஸ்வி எஸ்.ஹமீட், எப்.என். மீடியா நெட்வொர்க் நிறுவனத்தின் உரிமையாளரும், சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய பணியின் ஊடகப் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான ஏ.டபிள்யூ.எம்.பஸ்லான் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

– எம்.யூ.எம்.சனூன்



# திருவாசக முற்றோதல்

சம்பூர் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் கொட்டியாபுரப்பற்று இந்து சமய அபிவிருத்தி ஒன்றியத்தினால் சம்பூர் ஆலய பரிபாலன சபையின் ஆதரவுடன் வெள்ளிக்கிழமை (10) திருவாசக முற்றோதல் இடம்பெற்றது.

சம்பூரின் முதுசங்களான சைவப்புலவர் குகராஜா, சைவப்புலவர் வெற்றிவேல் ஐயா போன்றோருடன் கொட்டியாபுரபற்று இந்து சமய அபிவிருத்தி ஒன்றிய அங்கத்தவர்கள் மற்றும் சம்பூரில் பௌராணிக மரபில் வளர்ந்து வரும் புராண படன ஓதுவார்கள் உரையாளர்கள் என இளைய தலைமுறையின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

– அ.அச்சுதன்





ஜப்பான்

### 29 ரஷ்ய நிறுவனங்கள் மீது

# பொருளாதார தடை

உக்ரைனுக்கு தனது ஆதரவை தெரிவிக்கும் வகையில், ரஷ்யாவைச் சேர்ந்த 11 தனிநபர்கள், 29 நிறுவனங்கள் மற்றும் 3 வங்கிகள் மீது, ஜப்பான் பொருளாதார தடை விதித்துள்ளது.

நேட்டோ கூட்டணியில் இணைய முயன்ற உக்ரைன் மீது ரஷ்யா 2023ஆம் ஆண்டு போர் தொடுத்தது. இதில் அமெரிக்கா, பல ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு ஆதரவாக செயற்படுகின்றன. எனவே, உக்ரைனுக்கு ஆயுதம் விநியோகம், பொருளாதார உதவிகளை அந்த நாடுகள் வழங்குகின்றன. அதேபோல் ரஷ்யா மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளும் விதிக்கப்படுகின்றன.



அதன்படி, உக்ரைனுக்குத் தனது ஆதரவைத் தெரிவிக்கும் வகையில், ரஷ்யாவைச் சேர்ந்த 11 தனிநபர்கள், 29 நிறுவனங்கள் மற்றும் 3 வங்கிகள் மீது ஜப்பான் பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

மேலும், தொழில்நுட்பம் மற்றும் எந்திர உற்பத்தி உள்ளிட்ட ரஷிய இராணுவம் சார்ந்த 22 தொழிற்சாலைகளுக்கு ஏற்றுமதி தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, ரஷ்யாவுக்கு ஏற்றுமதி தடை உள்ள 335 பொருட்களின் பட்டியலுக்கும் ஜப்பான் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

### பங்களாதேஷ் குழாமில்

# ஷகிப், லிட்டன் இல்லை




சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான பங்களாதேஷ் குழாமில், முன்னாள் அணித்தலைவர்கள் ஷகிப் அல் ஹஸன், லிட்டன் தாஸ் மற்றும் அஃபிஃப் ஹொஸைன், ஷொரிஃபுல் இஸ்லாம், ஹஸன் மஹ்மூட் ஆகியோர் இடம்பெறவில்லை.

குழாம்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ (அணித்தலைவர்), செளமியா சர்கார், தன்ஸிட் ஹஸன், தௌஹிட் ஹிரிடோய், முஷ்பிக்கூர் ரஹீம், மகமதுல்லா, ஜாகிர் அலி, ரிஷாட் ஹொஸைன், தஸ்கின் அஹ்மட், நசும் அஹ்மட், முஸ்தபிசூர் ரஹ்மான், பர்வேஸ் ஹொஸைன் எமோன், மெஹிடி ஹஸன் மிராஸ், தன்ஸிம் ஹஸன் சகிப், நஹிட் ரானா.

அமெரிக்கா

### காட்டுத்தீயை சாதகமாக பயன்படுத்தி

# வீடுகளில் திருடர்கள் கைவரிசை

லொஸ் ஏஞ்சல்சில், காட்டுத்தீயை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, சிலர் வீடுகளில் நுழைந்து திருடி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வீடுகளை சூறையாடிய பலரை பொலிஸார் கைது செய்துள்ள நிலையில், அங்கு ஊரடங்கு நீட்டிக்கப்படுவதாக, தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரம் அமைந்துள்ளது. அந்த நகரின் மத்தியில் ஹாலிவுட் பகுதி உள்ளது. அங்கு முன்னணி திரைப்பட நிறுவனங்கள், அவற்றின் திரைப்பட நகரங்கள் அமைந்துள்ளன. இதன் காரணமாக ஹொலிவூட் திரையுலகின் தலைநகராக லொஸ் ஏஞ்சல்ஸ் விளங்குகிறது.

கடந்த 7ஆம் திகதி லொஸ் ஏஞ்சல்ஸின் பாலிசேட்ஸ் பகுதியில் காட்டுத்தீ ஏற்பட்டது. மலைப்பகுதிகள், எளிதில் தீப்பற்றி எரியும் பைன் மரங்களால் காட்டுத் தீ அதிவேகமாகப் பரவியது. தற்போது பாலிசேட்ஸ், ஈட்டன், ஹர்ஸ்ட், லிடியா ஆகிய பகுதிகளில் கட்டுக்கடங்காமல் தீ பரவி வருகிறது.

கடந்த எட்டு மாதங்களுக்கும் மேலாக மழை இல்லாத காரணத்தால் வறண்டு கிடந்த பகுதிகளில் பற்றிய தீ, தற்போது காட்டுத் தீயாக மாறி வருகிறது. லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் சுமார் ஒரு கோடி பேர் வசிக்கின்றனர். இதில் காட்டுத் தீ பரவும் பகுதிகளிலிருந்து சுமார் 4 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

90க்கும் மேற்பட்ட முறை, மக்கள் வெளியேற வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.



நகரம் முழுவதும் ஆறு பகுதிகள் தீ விபத்துகளால் எரிந்து சேதம் அடைந்துள்ளது. வைத்தியசாலைகள், எரிபொருள் நிரப்பும் நிலையம், உணவகங்கள் என அனைத்து பகுதியும் கருகியுள்ளன.

மாலிபூ பகுதியில் மட்டும் 13 ஆயிரம் ஏக்கர் பரப்பளவுள்ள பகுதிகள் கருகி சேதமடைந்துள்ளது. தீயை அணைப்பதற்காக அமெரிக்கா கோடிக்கணக்கான ரூபாயை செலவழித்து வருகிறது. தீயணைப்பு பணியில் கனடாவும் இணைந்துள்ள நிலையில், பல ஹொலிவூட் நடிகர்களின் வீடுகளும் தீக்கிரையாகியுள்ளது. மேலும் பல பகுதிகள் தீ விபத்து அபாயத்தில் இருக்கிறது. பொதுமக்கள் பலர் வீடுகளை இழந்துள்ளனர்.

லொஸ் ஏஞ்சல்ஸ் காட்டுத் தீயால் அமெரிக்காவுக்கு சுமார் ரூ.13 இலட்சம் கோடி வரை இழப்பு ஏற்படலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல தனியார் வானிலை நிறுவனம் இந்த மதிப்பீட்டை வெளியிட்டுள்ளது. எனினும், அமெரிக்க அரசு அதிகாரிகள் இது குறித்து எதுவும் கருத்து தெரிவிக்கவில்லை.

இந்நிலையில், காட்டுத் தீயால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 13ஆக அதிகரித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. தொடர்ந்து தீ பரவி வருவதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. பலர் பலத்த தீக்காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுவரை 22,000 ஏக்கர் பரப்பளவில் காட்டுத்தீ பரவியுள்ள நிலையில், தீயைக் கட்டுக்குள் கொண்டு வர தீயணைப்புத்துறை தீவிர முயற்சியை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### திருக்கோ இருபதுக்கு-20 லீக்

# 2025 - மூன்றாவது பருவம்

ஸ்பர் ஏ.எச்





திருக்கோ இருபதுக்கு-20 லீக் 2025இல் மூன்றாவது பருவம் நடைபெறவுள்ளது. இப்பருவத்தில் 12 அணிகள் பங்கேற்கின்றன. இப்போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை (18), ஞாயிற்றுக்கிழமை (19), இம்மாதம் 24ஆம், 25ஆம், அடுத்த மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இத்தொடரை திருக்கோ சுப்பர் 40 கிரிக்கெட் கழகம் ஒழுங்கமைக்கிறது. 12 அணிகள் இத்தொடரில் பங்கேற்கின்றன.

### மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான

# பாகிஸ்தானின் குழாமில் நசீம், அப்பாஸ் இல்லை



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான பாகிஸ்தான் குழாமில் மொஹமட் அப்பாஸ், நசீம் ஷா, ஆமிர் ஜமால், மிர் ஹம்ஸா ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஷகீன் ஷா அஃப்ரிடியும் குழாமில் இடம்பெறவில்லை.

காயம் காரணமாக சைம் அயூப், விக்கெட் காப்பாளர் ஹசீபுல்லாஹ் கானும் மற்றும் அப்துல்லாஹ் ஷஃபிக்கும் குழாமில் இடம்பெறாத நிலையில், இமாம்-உல்-ஹக், றொஹைல் நஸீர், முஹமட் ஹுரைரா ஆகியோர் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

குழாம்: ஷண் மசூட் (அணித்தலைவர்), இமாம்-உல்-ஹக், மொஹமட் ஹுரைரா, பாபர் அஸாம், கம்ரான் குலாம், செளட் ஷகீல் (உப அணித்தலைவர்), மொஹமட் றிஸ்வான் (விக்கெட் காப்பாளர்), றொஹைல் நஸிர் (விக்கெட் காப்பாளர்), சல்மான் அக்ஹா, நோமன் அலி, சஜிட் கான், அப்ரார் அஹ்மட், குராம் ஷஷாட், மொஹமட் அலி, கஷிஃப் அலி.

### இங்கிலாந்துக்கெதிரான தொடருக்கான

# இந்திய குழாமில் ஷமி



இங்கிலாந்துக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான இந்தியக் குழாமில் மொஹமட் ஷமி இடம்பெற்றுள்ளார்.

ஜஸ்பிரிட் பும்ரா, றிஷப் பண்ட் ஆகியோரும் காயம் காரணமாக றியான் பராக்கும் குழாமில் இடம்பெறவில்லை.

இதேவேளை, உப அணித்தலைவராக அக்ஸர் பட்டேல் பெயரிடப்பட்டுள்ளார்.

குழாம்: சூரியகுமார் யாதவ் (அணித்தலைவர்), சஞ்சு சாம்ஸன், அபிஷேக் ஷர்மா, திலக் வர்மா, ஹர்திக் பாண்டியா, றிங்கு சிங், நிதிஷ் குமார் றெட்டி, துருவ் ஜுரேல் (விக்கெட் காப்பாளர்), அக்ஸர் பட்டேல் (உப அணித்தலைவர்), ஹர்ஷித் ராணா, அர்ஷ்டீப் சிங், மொஹமட் ஷமி, வருண் சக்கரவர்த்தி, ரவி பிஷ்னோய், வொஷிங்டன் சுந்தர்.

தமிழகம்

### நீர் தேடிவந்து

# கிணற்றில் விழுந்த காட்டுப்பன்றிகள்

திருப்பத்தூர் மாவட்டம், சின்ன சமுத்திரம் அருகே காப்புக் காட்டில் இருந்து தண்ணீர் தேடி விவசாய நிலத்துக்குள் புகுந்த 13 காட்டுப்பன்றிகள், அங்கிருந்த கிணற்றில் தவறி விழுந்துள்ளன.

இதையடுத்து, இது குறித்து அப்பகுதி மக்கள், தீயணைப்புத்துறைக்குத் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற தீயணைப்பு வீரர்கள், வலைகள் மற்றும் கயிறுகள் மூலம் கிணற்றுக்குள் இருந்து அனைத்து காட்டுப்பன்றிகளையும் பத்திரமாக மீட்டனர்.

பின்னர் அந்த காட்டுப்பன்றிகளை அருகில் உள்ள வனப்பகுதிக்குள் விரட்டியுள்ளனர்.



இந்தியா

### ஆப்பிள் நிறுவனத்தின்


# மறைந்த இணை நிறுவனரின் மனைவி இந்தியா விஜயம்

அமெரிக்காவின் ஆப்பிள் நிறுவனத்தின் இணை நிறுவனர் மறைந்த ஸ்டீவ் ஜாப்ஸ் மனைவி லாரன் பாவெல் (61), பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவில் பங்கேற்பதற்காக இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அவர், நிரஞ்சனி அகாராவின் மகா மண்டலேஷ்வர் சுவாமி கைலாஷ் ஆனந்த் ஜி மகராஜ் முகாமில் 17 நாட்கள் தங்கியிருக்கப் போவதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், திரிவேணி சங்கமத்தில் புனித நீராடுவதுடன் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார். குறிப்பாக கல்பவாசம் மேற்கொள்ளவுள்ளார்.

இதுகுறித்து கைலாஷ் ஆனந்த் கூறும்போது, “மகா கும்பமேளாவில் பங்கேற்க வரும் லாரன் பாவெல் இங்கு தியானம் செய்ய உள்ளார். அவருக்கு கமலா என நாங்கள் பெயர் வைத்துள்ளோம். அவர்



எங்களுக்கு மகள் போன்றவர். அவர் இந்தியாவுக்கு வருவது 2ஆவது முறை ஆகும்.

“லாரன் பாவெலை சாதுக்கள் பேரணியில் சேர்த்துக்கொள்ள முயற்சி செய்வோம். எனினும், இதுகுறித்து அவர்தான் முடிவு செய்ய வேண்டும். இந்த பயணத்தின்போது பல்வேறு ஆன்மிக குருக்களை அவர் சந்திப்பார்.

இது மதம் தொடர்பான விழா. இந்தியா மட்டுமல்லாது உலகம் முழுவதும் உள்ள மக்கள் இந்த விழாவுக்கு வந்து ஆசி பெறுவார்கள்” என்றார்.

### இத்தாலிய சீரி ஏ தொடர்

# சமநிலையில் மிலன் கைகரி போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை (11) நடைபெற்ற கைகரியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஏ.சி. மிலன் சமப்படுத்தியது.

மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை அல்வரோ மொராட்டா பெற்றதோடு, கைகரி சார்பாகப் பெறப்பட்ட கோலை நதிர் ஸொர்டியா பெற்றிருந்தார்.

இதேவேளை டொரினோவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் சமப்படுத்தியது. ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை கெனான் யில்டிஸ் பெற்றதோடு, டொரினோ சார்பாகப் பெறப்பட்ட கோலை நிகொலா விளாசிச் பெற்றிருந்தார்.

இந்நிலையில், உடினிஸின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் அத்லாண்டா சமப்படுத்தியது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 13 ஜனவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.